



பெரியபளையூர்

அமரர்

தாமோதரம்பிள்ளை தர்மகுலசிங்கம்

அவர்களின்

# தர்மதீபம்

## நினைந்துருகல் மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியபளை

பளையைப்

பிறப்பிடமாகவும்

வாழ்விடமாகவும் கொண்ட

"உயர் சைவ வேளாண் குல திலகம்"

அமரர்

# தாமோதரம்பிள்ளை

# தர்மகுலசிங்கம் (MO)

அவர்களின்

நினைவாக

மலர்ந்த

நினைந்துருகல்

மலர்.



# தர்மதீபம்

27.02.2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்னை மடியில்
28.01.1949

ஆண்டவன் திருவடியில்
28.01.2023

நிறைந்த வாழ்வொடு நீள்துயில் கொண்ட
அமரர்
# தாமோதரம்பிள்ளை தர்மகுலசிங்கம்

திதி நிர்ணயம்
சுபகிருது வருடம் தைத்திங்கள்
வளர்பிறையாம் சப்தமியில்
உயர்குணத்தோன் எங்கள்
தர்மகுலசிங்கம் இறைகரத்தில்
இணைந்த நாள் காண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

MO என்ற இப்பெருமனிதன்

இருந்தும் இறவா பெரும் தலைவன்

பண்பும் பண்பாட்டு வாழ்வும்

உழைப்பும் உறுதியும் கொண்ட

ஒய்வறியா தர்மகுலசிங்கம்

மண் விட்டு சென்று

மாயவன் பாதம் சேர்ந்த

நினைவு நாளின் எம்

சமர்பணம்

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# தோத்திரப் பாக்கள்





## பிள்ளையார் துதி

*திருச்சிற்றம்பலம்*

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா

## தேவாரம்

ஆலந்தான் உகந்து அமுது செய்தானை
ஆதியை அமரர் தொழுதேத்தும்
சீலந்தான் பெரிதும் உடையானைச்
சிந்திப்பார் அவர் சிந்தை உளானை
ஏலவார் குழலாள் உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
காலகாலனைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

வேண்டத்தக்கது அறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற்கு அரியாய் நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசு ஒன்று உண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை
நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப் போந்த
அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி
கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோஅருள் கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே.

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே சற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.


## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே சற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோல்முறையரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நால்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.


*திருச்சிற்றம்பலம்*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் தாமோதரம்பிள்ளை தர்மகுலசிங்கம் அவர்களின் வாழ்க்கைப் பதிவுகள்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 1949 - 01 - 28 |  | 2023 - 01 - 28 |

இலங்கை திருநாட்டின் வடமாகாண பரப்பில் பயிர் விளையும் பூமியாக நீர்வளமும் நிலவளமும் ஒருங்கே அமையப் பெற்ற கிளிநொச்சி எனும் நிர்வாக மாவட்டத்தில் பனையாலும் தென்னையாலும் பசுமை போர்வை கொண்ட பச்சிலைப்பள்ளி எனும் புராண நகரத்தில் பளை நகர பிரிவிலுள்ள பண்பாட்டு கிராமமான பெரியபளையின் புகழ்பூத்த குடும்பங்களில் ஒன்றான தாமோதரம்பிள்ளைகுடும்பத்தில் தாமோதரம்பிள்ளை செல்லம்மா தம்பதியினருக்கு மூன்றாவது ஆண்மகனாக வந்துதித்தவர் இந்த தர்மகுலங்கம் அவர்கள். ஒன்பது பேர் கொண்ட இக்குடும்பத்தில் 28.01.1949-ல் மூன்றாவது பிள்ளையாக பிறந்த இவருக்கு 7 ஆண் சகோதர்களும் ஒரு பெண் சகோதரியும் சகோதரர்களாக கொண்ட மகிழ்ச்சி மிக்க குடும்பத்தில் ஒருவராக வாழக் கிடைத்தது. ஒல்லாந்து மொழியில் ஓடலி என அழைக்கப்பட்ட மருந்துக் கலவையாலரான இவரது தந்தையாரின் குடும்பம் பெரியபளையில் வசித்த செல்வம் மிக்க குடும்பங்களில் ஒருவராக இருந்தவர்கள் 8 ஆண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் இருந்த குடும்பத்தில் எட்டி பார்க்க முடியாத நடப்பு இருந்தது போல இவரது சகோதர்கள் எல்லோரும் கல்வியில் அக்கறை கொண்டவர்களாக இருந்தனர் அதனால் அக்காலத்தில் மதிப்பு மிக்க அரசபணியில் அவர்களில் பலர் இணைந்து கொண்டனர். அமரரும் கூட பளை மத்திய கல்லூரியில் க.பொ.த. சாதாரண தரம் வரை கல்வி கற்று 01.06.1971-ல் வைத்தியசாலை தொழிலாளியாக அரச சேவையில் இணைந்து கொண்டார். கிளிநொச்சி வைத்தியசாலையில் முதல்முதலில் கடமையேற்ற இவர் 15.04.1972-ல் நயினாதீவு வைத்தியசாலைக்கு இடமாற்றம் பெற்று கொண்டார். அதே ஆண்டிலே 01.11.1972-ல் யாழ் போதனா வைத்தியசாலைக்கு இடம் மாற்றம் பெற்றுக் கொண்டார். 01.11.1984-ல் ஆண் பரிசாரகராப் பதவியேற்றுக் கொண்டார் மணப்பருவம் அவருக்கு ஏற்பட்டபோது பேராலையூரை சேர்ந்த சின்னையா பொன்னு தம்பதிகளின் 9வது பிள்ளையான அன்னமுத்து மீது காதல் கொண்டு 07.02.1988-ல் திருமணம் செய்து கொண்டார்.

இல்லறவாழ்வில் சகோதர பாசத்தில் மகிழ்வுடன் வாழ்ந்த இவரது மூத்த சகோதரன் சுவாமிநாதன் அவர்கள் நிர்வாக அலுவலராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் இருந்தார். அவரிடம் அதீக அறிவுரையை கலந்தாலோசிக்கம் இவரது இரண்டாவது சகோதரன் நாகரட்ணம் அவர்கள் இம் மாகாணத்தில் பிரபலமான இரசாயனவியல் ஆசிரியராக இருந்தவர் இவரது சகோதரன் தனபாலசிங்கம் அவர்கள் கிராம அலுவலராக பணியாற்றியவர் அடுத்த சகோதரன் தர்மராஜசிங்கம் அவர்கள் ஜேர்மனி நாட்டில் வசிப்பவராகவும் அருமைநாதன் மருந்தாளராகவும் சிவநாதன் சுவிஸ் நாட்டிலும் திருச்செல்வநாதன் பிரபலவர்த்தகராகவும் எட்டு ஆண் சகோதரர்களுடனும் ஒரேயொரு பெண் சகோதரியான அரியமலர் அவர்களுடன் கூடிக்குலாவி சகோதர பாசம் அதிகம் கொண்டவராக அவர்களது இடர்களில் அதிக உதவி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிபவராகவும் இருந்த மகிழ்ச்சியான வாழ்வில் இல்லற பந்தம் சென்று 10 மைத்துனர் மைத்துனிகளையும் பெற்றுக் கொண்டார் மகிழ்வான துணையாக தான் விரும்பி தேடிய அன்னமுத்து அவர்கள் நூலகராக பணிபுரிந்தவர் அவர்களின் இல்லற மகிழ்வால் தர்மராஜினி, தர்மராஜ், தர்மரஜீவ் ஆகிய 3 பிள்ளைகளை பெற்று அவர்கள் மீது அதிகபாசம் கொண்ட ஒரு பொறுப்பு வாய்ந்த தந்தையாக தன் கண்ணை இமைகாப்பது காத்துபோல் காத்து வந்தவர் பிள்ளைகளை கல்வியிலே கவனமிடப் பண்ணி தனது மூத்தமகளை கல்வியியல் பட்டம் பெற்ற ஆசிரியராக தரமுயர தன்னலான பங்கை செலுத்தினார். மகளின் பருவ வயதினில் பொருத்தமான துணை ஒன்றை தேடி வரணியூரை சேர்ந்த திருமாறன் என்ற அரசுசார நிறுவன ஒருங்கிணைப்பாளராக பணி செய்பவரை தனது ஒரே மகளுக்கு மருமகனாக்கி ஆருசா என்ற செல்லப் பேத்தியை பெற்றுக் கொண்டார். அதேபோல தனது மூத்த மகனான தர்மராஜ் இலண்டன் மாநகருக்கு அனுப்பி அவருக்கு பொருத்தமான சாவகச்சேரியை சேர்ந்த கௌஸ்திகாவை மருமகளாக பெற்று மகிழ்சியடைந்தார் தனது இளைய மகளான தர்மராஜீவ் 2010 வன்னி பெரும்சமரின் பின்னர் காணாமல் ஆக்கப்படதால் அந்த கொடிய வலி அவரது இறுதிக் காலத்தை கடுமையாக பாதித்திருந்தது மாயவன் மீது அதிக பற்றுக் கொண்ட அவரால் இந்த இழப்பை தாங்க முடியாது மல்வில் கிருஸ்னரை வழிபடமாட்டேன் என அடம்பிடித்து நிற்கும் அளவுக்கு அந்த வேதனை அவரை தாக்கியிருந்தது நல்ல உழைப்பாளி என்பதில் அவருக்கு இணை அவராகவே இருந்தார். பருவத்துக்கு காய்கறி செய்வது பனம் கிழங்கு உற்பத்தி செய்வது இயற்கை உரத்துக்காக எருச்சேர்ப்பது என அவருக்கே உரிய பல தொழில்களில் அவரது பிரயாசை வெளிப்பட்டது மனைவி மீதும் பிள்ளைகள் மீதும் சகோதரர்கள் மீதும் அவர் கொண்டிருந்த பாசம் கனதியானது தொழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நிமிர்த்தமாக அவர் பணியாற்றிய யாழ்ப்பாண போதனாவைத்திய சாலையில் படிப்படியாக பதவி உயர்வு பெற்று 1987-ம் ஆண்டில் பதிவேட்டுப் பொறுப்பாளராகப் பதவி உயர்வு பெற்றார். அக்காலப்பகுதியில் பளையிலிருந்து மகப்பேற்றுக்கும் சிகிச்சைகளுக்கும் செல்லும் பொதுமக்கள் பலருக்கு அவர் ஆற்றிய கடமைக்கு மேலதிகமான பணி காரணமாக அவர் MO என எல்லோரும் அழைக்க காரணமானார். தனது ஊரைச் சார்ந்தவர்கள் எவராயினும் வைத்தியசாலை செல்லும்போது அவர்களுக்கு எத்தேவை அவசியமே அதனை தனது செல்வாக்கைப் பயன்படுத்தி காலதாமதமின்றி சரியாக வழிப்படுத்தி செய்த சேவையினால் அவரும் அயலவரும் மகிழும் வகையில் அவரது சேவைக்காலம் அமைந்திருந்தது. 28.01.2009 அவர் சேவையிலிருந்து ஓய்வு பெறும் வரை எல்லோருக்கும் ஒரு வைத்திய அதிகாரியாகவே ஆழு எனும் சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டு சேவை புரிந்தார். சிறந்த மாயவன் பக்தரான இவர் இறுதி வரை மக்களுக்கு உதவும் பணியில் தன்னை இணைத்தே இருந்தார். சிறிது காலம் நோய்வாய்ப்பட்டபோதும் இறுதிவரை மகிழ்ச்சியாக இருந்து தனது பிறந்த தினத்திலேயே இறைவனின் பாதம் சென்றடைந்த அன்னாரின் ஆன்ம ஈடேற்றத்துக்காக அனைவரும் பிரார்த்திப்போம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் தர்மகுலசிங்கம் அவர்கள் அலுவலகத்தில்....



அமரர் தர்மகுலசிங்கம் அவர்களின் திருமண நிகழ்வு.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய மகனின் பிறந்தநாள் நிகழ்வில்....




மகளின் பூப்புனித நீராட்டு விழாவில் தாய் மற்றும் சகோதர குடும்பத்தாருடன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளின் திருமணத்தின்போது குடும்பத்தாருடன்.




மகளின் பதிவுத் திருமணத்தின்போது குடும்பத்தாருடன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசைப்பேர்த்தியின் பிறந்தநாளில் கொண்டாட்டத்தின்போது.



ஆசைப்பேர்த்தியின் பல்லுக்கொழுக்கட்டை நிகழ்வில் மருமக்களுடன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்னார்**

**தினந்தோறும் வீட்டில் துளசிச் செடியை வலம் வந்து பூப்போட்டு பாடும் பாடல்.**

மாயவனே ரகுராமா அருகே வா வா
வஞ்சனைகள் பறந்தோட நெஞ்சில் வாவா
காயம்பூ நிறமுடனே கனவில் வாவா
கருமுகில் மேனியனே என் கருத்தில் வாவா
நாயகனே என் நாவில் இருக்க வா வா
நாள்தோறும் உன் பாதம் துதிக்க வா வா
ஆயர் குலம் துதித்தவனே கெருடன் மீதில்
அன்புடனே ஏறிவந்து அருள் செய்வாயே
ஹரிஓம் நம நாராயணா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருஸ்ணர் கவசம்

காப்பு

அருமறை முதல்வனை ஆழிமாயனை
கருமுகில் வண்ணனைக் கமலக் கண்ணனை
திருமகள் தலைவனை தேவ தேவனை
இருபத முளரிகள் இறைஞ்சி ஏத்துவாம்.



அகரம் முதலே அழியாப் பொருளே
ஆயர் குலமே நேயர் கரமே
இகமும் பரமும் இணையும் இடமே
ஈதல் பரமாம் இதயத் தவமே
உலகக் குடையே உயிரின் கலையே
ஊதும் குழலுள் வேதப் பொருளே
எரியும் கனலில் தெரியும் புனலே
ஏழை மனதில் வாழும் அருளே !
ஐயம் தீர்க்கும் அறிவுக் கதிரே
ஐவர் துணையே அன்புச் சிலையே
ஒளியே விழியே உயிரே வழியே
ஓடும் நதியில் பாடும் அலையே
அவ்வவ் உலகை ஆக்கும் நிலையே
அடியேன் சரணம் சரணம் சரணம் !

அறமே அறமே அறமே அறமே
திறமே திறமே திறமே திறமே
தவமே தவமே தவமே தவமே
வரமே வரமே வரமே வரமே
வேதம் விளையும் வித்தே விளைவே
நாதம் பொழியும் நலமே நிலமே
ஓதும் பொழுதே உடனே வருவாய்
உள்ளம் கேட்கும் வெள்ளம் தருவாய்
அறியாக் கவலை அதிகம் அதிகம்
அருள்வாய் அருள்வாய் கவசம்! கவசம்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யா மொழியே பொங்கும் நிலவே
பூமிக் குடையின் காவற் பொருளே
பார்த்தன் பணியும் பாதம் காக்க
பாஞ்சஜன்யம் பக்தனை காக்க
மூடர்கள் தமையும் மோகனன் காக்க
முள்ளில் மலராய் முளைத்தோன் காக்க
வாடும் உயிரை மன்னவன் காக்க
தேடும் விழியைத் திருமால் காக்க
கேலிப் பொருளைக் கிருஷ்ணன் காக்க
கண்ணீர் நதியைக் கண்ணன் காக்க
துன்பம் என்றொரு சுமையைத் தீர்க்க
தூயோன் வருக ! துணையே தருக !

மாதர் கற்பும் மடவார் நோன்பும்
மாயோன் காக்க மலைபோல் வருக !
தகிடத் தகிடத் தகிடத் தகவென
தறிபடு துன்பம் தறிகெட ஓட
திகிடத் திகிடத் திகிடத் திகிடத்
திசைவரு கவலை பசைஇலதாக !
துருவத் துருவத் துருவத் துருவிடத்
தொலையாப் பொருளே அலையாய் வருக !
நிஷ்கா மத்தில் நிறைவோன் வருக
கர்மசன் யாசக் களமே வருக !
ஞானம் யோகம் நல்குவன் வருக !
நல்லோர் வாழ்வில் நலமே நிறைக !
அடியேன் துயரம் அதிகம் அதிகம்
அருள்வாய் அருள்வாய் கவசம் கவசம் !
பொங்கும் வேலும் புண்ணாக் காது
பொருந்தும் துயரம் பொடிபடு மாறு
தாங்கும் தலைவன் தாமரைக் கண்ணன்
தாளில் விழுந்தேன் சரணம் சரணம் !
மதுசூதனனே மலரடி சரணம் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருடீகேசா இணையடி சரணம் !
கீதா சாரிய கிருஷ்ணா சரணம் !
வேதாச் சாரிய வேந்தே சரணம் !
தேவகி மைந்தா சிறியேன் சரணம் !
யசோத குமரா அடியேன் சரணம் !
உன்னை விட்டொரு உறவுக ளில்லை
என்னை விட்டொரு இனியவ னில்லை
நம்மை விட்டொரு நண்பர்க ளில்லை
நன்மையில் உன்போல் நாயக னில்லை
எங்கெங்கே நான் இருந்திடும் போதும் ,
அங்கங்கே நீ அருள் செய வருக !
கோசலை ஈன்ற குமரா வருக !
கோதையின் மாலை கொண்டவன் வருக !
ரகுவம் சத்தின் நாயகன் வருக !
யதுவம் சத்தின் யாதவன் வருக !
மதுவை வென்ற மாதவன் வருக !
மலைக்குடி கொண்ட மாலவன் வருக !
திருப்பதி யாளும் திருமால் வருக !
திருவரங் கத்துப் பெருமாள் வருக
இராவணன் கொடுமை தீர்த்தாய் துன்பம்
இராவணம் எமக்கும் இன்னருள் புரிக
கம்சன் கொடுமை களைந்தோய் வருக !
காலனை வெல்லக் கைவலி தருக !
நெற்றியில் திருமண் நெஞ்சில் வைரம்
காதில் குண்டலம் கையில் வில்லொடு
தண்டைக் காலில் சலங்கை குலுங்க
அண்டையில் வந்து அருளே புரிக !
கௌரவர் தம்மை களத்தில் வென்றாய்
கௌரவம் காக்க கண்ணா வருக !
பார்த்தன் மகிழப் பாடம் சொன்னாய்
படித்தவன் மகிழப் பரமே வருக !
மூன்று குணங்கள் முறையாய்க் கூறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சான்றோன் பாதம் தாவி யணைத்தேன்
சிக்கென உன்னைச் சேர்த்துப் பிடித்தேன்
பக்கென உந்தன் பாதம் பற்றினேன்
கொக்கென நின்று குறிவைத் திருந்தேன்
அக்கணம் வந்தாய் அடியில் விழுந்தேன்
இக்கணம் என்னை ஏங்க விடாமல்
தக்கவனே நீ தயவுடன் அருள்க !
கல்லாய்ப் போனவள் காலடி பட்டு
பெண்ணாய் ஆனது பிழையே யன்று !
உன்னால் தானே உலகம் இயக்கம் !
கண்ணனி லாமல் கடல்வான் ஏது ?
கண்ணனி லாமல் கடவுளுமில்லை
கண்ணனி லாமல் கவிதையுமில்லை
கண்ணனி லாமல் காலமுமில்லை
கண்ணனி லாவிடில் காற்றே இல்லை !
எத்தனை பிறவி எத்தனை பிறவி
அத்தனை பிறவியும் அடியேன் கொண்டால்
சத்திய நாதன் தாள்களை மறவேன்
தத்துவக் கண்ணன் தனிமுகம் மறவேன்
உன்னை நம்பி உனையே சேர்ந்தால்
பிறவிகளில்லை' நீ பேசிய பேச்சு
உலகில் போதும் ஒருமுறை மூச்சு !
உன்னிடம் சேர்த்து உன்வடி வாக்கு !
இங்கே நாங்கள் இருக்கும் வரையில்
சங்கு முழங்கு தர்மம் நிலைக்க !
பிள்ளைகள் வாழ்க்கை பிழையா காமல்
மனையவள் வாழ்க்கை மாண்பு கெடாமல்
இல்லை என்றொரு நாளில் லாமல்
இன்னும் என்னும் ஆசை வராமல்
தொல்லை என்பது துளியுமில்லாமல்
தோற்றும் நோய்கள் பற்றி விடாமல்
முதுமைத் துயரம் மூண்டு விடாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுக்கையில் விழுந்து பரிதவிக்காமல்
சிந்தனை கெட்டுத் திறமையும் கெட்டு
நிந்தனை பெற்று நலிய விடாமல்
என்றும் பதினா றிளமை வழங்கு !
இப்பணி தொடர அற்புதம் காட்டு !
தளரா மேனியில் சக்தியைக் கூட்டு
தாய்போ லிருந்து சாதம் ஊட்டு !
வாழ்ந்தால் இப்படி வாழ்வது நன்றென
ஊரார்க் கென்னை உதாரணம் காட்டு !
உலகில் ஒருவன் உத்தமன் இவனென
உயிர்கள் பேசிடும் ஒருநிலை கூட்டு !
சிறியவர் பெரியவர் வறியவர் செல்வர்
சரிசரி சரியென்று தலையை யசைக்க
பொலி பொலி பொலியெனப் புகழும்விளங்க
மளமள மளவென மனையிருள் நீங்க
கலகல கலவென காசுகள் சேர
தளதள தளவெனத் தர்மம் தழைக்க
வரவர வரவர வாய்ப்புகள் வாய்க்க
ரகுபதி பசுபதி நன்மைகள் அருள்க
ஐயா சரணம் சரணம் சரணம் !
அடியேன் வாழ்வில் நீயே கவசம் !
வந்தது வாழ்வில் மன்னவன் கவசம் !
கவசம் கவசம் கவசம் கவசம் !
வாழ்க்கை என்னும் கோபுரக் கலசம் !

அரிஓம் அரிஓம் அரிஓம் அரிஓம்
அவனே துணையென அறிவோம் ! அறிவோம்!
அரிஓம் அரிஓம் அரிஓம் அரிஓம்
அவனிடம் எதையும் தருவோம் தருவோம்
ஜெயஜெய ராமா ஜெயஜெய கிருஷ்ணா
ஜெயஜெய ஜெயஜெய
ஜெயஜெய ஜெயஜெயஜெயஜெய
ஜெயஜெய ஜெயஜெய ஜெயஜெய
ஜெய மங்கள ரூபா மலரடி சரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பாவை



மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர்! போதுமினோ, நேரிழையீர்!
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்,
ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்,
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்
நாரா யணனே, நமக்கே பறைதருவான்,
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய். (1)

வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம்பாவைக்குச்
செய்யுங் கிரிசைகள் கேளீரோ! பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன் அடிபாடி,
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலை நீராடி
மையிட் டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம்
செய்யா தனசெய்யோம் தீக்குறளைச் சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய். (2)

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றிநீர் ஆடினால்,
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்கு பெருஞ்செந்நெ லூடு கயல் உகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப,
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய். (3)

ஆழி மழைக்கண்ணா! ஒன்று நீ கைகரவேல்
ஆழியுள் புக்கு முகந்துகொ டார்த்தேறி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்து
பாழியந் தோளுடைப் பற்பநா பன்கையில்
ஆழிபோல் மின்னி, வலம்புரிபோல் நின்றதிர்ந்து,
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய், நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். (4)

மாயனை மன்னு வடமதுரை மைந்தனை,
தூய பெருநீர் யமுனைத் துறைவனை,
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை,
தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரனை,
தூயோம்ஆய் வந்துநாம் தூமலர் தூவித்தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப்
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசுஆகும் செப்பேலோ ரெம்பாவாய். (5)

புள்ளும் சிலம்பினகாண் புள்ளரையன் கோயிலில்
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ?
பிள்ளாய்! எழுந்திராய், பேய்முலை நஞ்சுண்டு,
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி,
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்து அரியென்ற பேரரவம்
உள்ளம்புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். (6)

கீசுகீ சென்றெங்கும் ஆனைச்சாத் தன்கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ? பேய்ப்பெண்ணே!
காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்
ஓசை படுத்தத் தயிரரவம் கேட்டிலையோ?
நாயகப் பெண்பிள்ளாய்! நாராயணன் மூர்த்தி
கேசவனைப் பாடவும்நீ கேட்டே கிடத்தியோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசமுடையாய்! திறவேலோ ரெம்பாவாய். (7)
கீழ்வானம் வெள்ளென்று, எருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண் மிக்குள்ள பிள்ளைகளும்
போவான் போகின்றாரைப் போகாமல் காத்துன்னைக்
கூவுவான் வந்து நின்றோம், கோதுகலமுடைய
பாவாய்! எழுந்திராய் பாடிப் பறைகொண்டு
மாவாய் பிளந்தானை, மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்றுநாம் சேவித்தால்
ஆவாவென் றாராய்ந் தருளேலோ ரெம்பாவாய். (8)

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய,
தூமங் கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமான் மகளே! மணிக்கதவம் தாள்திறவாய்
மாமீர்! அவளை எழுப்பீரோ? உம்மகள்தான்
ஊமையோ? அன்றிச் செவிடோ அனந்தலோ?
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ?
மாமாயன், மாதவன், வைகுந்தன் என்றென்று
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய். (9)

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்!
மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார்?
நாற்றத் துழாய்முடி நாரா யணன்நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால் பண்டொருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கரணனும்
தோற்றம் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ?
ஆற்ற அனந்தல் உடையாய்! அருங்கலமே!
தேற்றமாய் வந்து திறவேலா ரெம்பாவாய். (10)

கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து,
செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்
குற்றமொன் றில்லாத கோவலர்தம் பொற்கொடியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புற்றர வல்குல் புனமயிலே! போதராய்,
சுற்றத்துத் தோழிமார் எல்லாரும் வந்துநின்
முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாட,
சிற்றாதே பேசாதே செல்லப்பெண் டாட்டிநீ
எற்றுக் குறங்கும் பொருளேலோ ரெம்பாவாய். (11)

கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி
நினைத்து முலைவழியே நின்றுபால் சோர
நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்!
பனித்தலை வீழநின் வாசல் கடைபற்றிச்
சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக் கினியானைப் பாடவும்நீ வாய்திறவாய்!
இனித்தான் எழுந்திராய் ஈதென்ன பேருறக்கம்?
அனைத்தில்லத் தாரும் அறிந்தேலோ ரெம்பாவாய். (12)

புள்ளின்வாய் கீண்டானை, பொல்லா அரக்கனைக்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்,
பிள்ளைகள் எல்லாரும் பாவைக் களம்புக்கார்
வெள்ளி எழுந்து, வியாழம் உறங்கிற்று
புள்ளும் சிலம்பினகாண் போதரிக் கண்ணினாய்!
குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே,
பள்ளிக் கிடத்தியோ? பாவாய்! நீ நன்னாளால்
கள்ளம் தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய். (13)

உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பின காண்
செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்,
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார்
எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய்! எழுந்திராய், நாணாதாய்! நாவுடையாய்!
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கயக் கண்ணானைப் பாடேலோ ரெம்பாவாய். (14)
எல்லே இளங்கிளியே! இன்னம் உறங்குதியோ?
சில்லென் றழையேன்மின், நங்கைமீர்! போதர்கின்றேன்
வல்லை, உன் கட்டுரைகள்! பண்டேஉன் வாயறிதும்!
வல்லீர்கள் நீங்களே, நானேதான் ஆயிடுக!
ஒல்லைநீ போதாய், உனக்கென்ன வேறுடையை?
எல்லோரும் போந்தாரோ? போந்தார், போந்து எண்ணிக்கொள்
வல்லானை கொன்றானை, மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை, மாயனைப் பாடேலோ ரெம்பாவாய். (15)

நாயக னாய்நின்ற நந்தகோபனுடைய
கோயில்காப் பானே! கொடித்தோன்றும் தோரண
வாயில்காப் பானே! மணிக்கதவம் தாள்திறவாய்
ஆயர்சிறுமிய ரோமுக்கு அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்
தூயோமாய் வந்தோம் துயிலெழப் பாடுவான்
வாயால் முன்னமுன்னம் மாற்றாதே அம்மா! நீ
நேய நிலைக்கதவம் நீக்கேலோ ரெம்பாவாய். (16)

அம்பரமே, தண்ணீரே, சோறே அறஞ்செய்யும்
எம்பெருமான்! நந்தகோ பாலா! எழுந்திராய்
கொம்பனார்க் கெல்லாம் கொழுந்தே! குலவிளக்கே!
எம்பெரு மாட்டி! யசோதாய்! அறிவுறாய்
அம்பரம் ஊடறுத் தோங்கி உலகளந்த
உம்பர்கோ மானே! உறங்காது எழுந்திராய்
செம்பொற் கழலடிச் செல்வா! பலதேவா!
உம்பியும் நீயும் உறங்கேலோ ரெம்பாவாய். (17)

உந்து மதகளிற்றன் ஓடாத தோள்வலியன்,
நந்தகோ பாலன் மருமகளே! நப்பின்னாய்!
கந்தம் கமழும் குழலீ! கடைதிறவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தெங்கும் கோழி அழைத்தனகாண் மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்
பந்தார் விரலி! உன் மைத்துனன் பேர்பாட,
செந்தா மரைக்கையால் சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய், மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். (18)

குத்து விளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறிக்
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா! வாய்திறவாய்
மைத்தடங் கண்ணினாய்! நீ உன் மணாளனை
எத்தனை போதும் துயிலெழ ஒட்டாய்காண்,
எத்தனை யேலும் பிரிவாற்ற கில்லாயால்,
தத்துவம் அன்று தகவேலோ ரெம்பாவாய். (19)

முப்பத்து மூவர் அமரர்க்கு முன்சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே! துயிலெழாய்
செப்பம் உடையாய்! திறலுடையாய்! செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா! துயிலெழாய்
செப்பன்ன மென்முலை செவ்வாய் சிறுமருங்குல்
நப்பின்னை நங்காய்! திருவே! துயிலெழாய்
உக்கமும் தட்டொளியும் தந்துஉன் மணாளனை
இப்போதே எம்மை நீராட்டேலோ ரெம்பாவாய். (20)

ஏற்றகலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப
மாற்றாதே பால்சொரியும் வள்ளல் பெரும்பசுக்கள்
ஆற்றப் படைத்தான் மகனே! அறிவுறாய்
ஊற்றமுடையாய்! பெரியாய்! உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே! துயிலெழாய்
மாற்றார் உனக்கு வலிதொலைந்து உன்வாசற்கண்
ஆற்றாதுவந்து உன்னடிபணியு மாபோலே,
போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோ ரெம்பாவாய். (21)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கண் மாஞாலத் தரசர் அபிமான
பங்கமாய் வந்துநின் பள்ளிக்கட் டிற்கீழே
சங்கமிருப் பார்போல் வந்துதலைப் பெய்தோம்
கிங்கிணி வாய்ச் செய்த தாமரைப் பூப்போலே,
செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ?
திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற் போல்,
அங்கணி ரண்டும் கொண்டு எங்கள்மேல் நோக்குதியேல்
எங்கள்மேல் சாபம் இழிந்தேலோ ரெம்பாவாய். (22)

மாரிமலை முழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்
சீரியசிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து,
வேரிமயிர் பொங்க எப்பாடும் பேர்ந்துதறி,
மூரிநிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்,
போதருமா போலேநீ பூவைப்பூவண்ணா! உன்
கோயில்நின்றும் இங்ஙனே போந்தருளிக் கோப்புடைய
சீரியசிங் காசனத்திருந்து யாம்வந்த
காரியம் ஆராய்ந் தருளேலோ ரெம்பாவாய். (23)

அன்று இவ்வுலகம் அளந்தாய்! அடிபோற்றி,
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய்! திறல்போற்றி,
பொன்றச் சகடம் உதைத்தாய்! புகழ்போற்றி,
கன்று குணிலா எறிந்தாய்! கழல்போற்றி,
குன்று குடையா எடுத்தாய்! குணம்போற்றி,
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி,
என்றென்று உன்சேவகமே ஏத்திப் பறைகொள்வான்
இன்றுயாம் வந்தோம், இரங்கேலோ ரெம்பாவாய். (24)

ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்து வளர,
தரிக்கிலா னாகித் தான் தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருப்பென்ன நின்ற நெடுமாலே! உன்னை
அருத்தித்து வந்தோம் பறைதருதி யாகில்
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி
வருத்தமுந் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். (25)

மாலே! மணிவண்ணா! மார்கழிநீ ராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்
ஞாலத்தை யெல்லாம் நடுங்குமுரல்வன
பாலன்ன வண்ணத்துள் பாஞ்சசன்னியமே
போல்வன சங்கங்கள் போய்ப்பாடுடையனவே,
சாலப்பெரும் பறையே, பல்லாண் டிசைப்பாரே,
கோல விளக்கே, கொடியே, விதானமே,
ஆலின் இலையாய்! அருளேலோ ரெம்பாவாய். (26)

கூடாரை வெல்லுஞ்சீர்க் கோவிந்தா! உன்தன்னை
பாடிப் பறைகொண்டு யாம்பெறும் சம்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாக,
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே யென்றனைய பல்கலனும் யாம் அணிவோம்
ஆடை உடுப்போம் அதன்பின்னே பாற்சோறு
மூடநெய் பெய்து முழங்கை வழிவார
கூடியிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். (27)

கறவைகள் பின்சென்று கானம் சேர்ந்துண்போம்
அறிவொன்று மில்லாத ஆய்க்குலத்து உன்தன்மைப்
பிறவிப் பெறுந்தனைப் புண்ணியம் யாம் உடையோம்
குறைவொன்று மில்லாத கோவிந்தா! உன்தன்னோடு
உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது!
அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உன்தன்னைச்
சிறுபேர ழைத்தனவும் சீறி யருளாதே,
இறைவா, நீ தாராய் பறையேலோ ரெம்பாவாய். (28)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்றம் சிறுகாலே வந்துன்னைச் சேவித்துன்
பொற்றா மரையடியே போற்றும் பொருள் கேளாய்
பெற்றம் மேய்த்துண்ணும் குலத்திற் பிறந்து நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது
இற்றைப் பறைகொள்வான் அன்று காண் கோவிந்தா!
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே ஆவோம் உனக்கே நா மாட்செய்வோம்
மற்றைநம் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய். (29)

வங்கக் கடல்கடைந்த மாதவனைக் கேசவனைத்
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி
அங்கப் பறைகொண்ட ஆற்றை, அணி புதுவைப்
பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான் கோதை
சொன்ன
சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே
இங்கிப் பரிசுரைப்பார், ஈரிரண்டு மால்வரைத்தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள்பெற் றின்புறுவ ரெம்பாவாய். (30)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமங்கையாழ்வார் அருளிய பெரிய திருமொழி

(திருமொழிவாசகம்)



**ராகம்: சங்கராபரணம்**

**தாளம்: திரிபுடைதாளம்**

வாடினேன்வாடிவருந்தினேன் மனத்தால்
பெருந்துயரிடும்பையில் பிறந்து
கூடினேன் கூடிஇளையவர்தம்மோடு
அவர் தரும்கலவியேகருதி
ஓடினேன் ஓடிஉய்வதோர்பொருளால்
உணர்வெனும்பெரும்பதம் தெரிந்து
நாடினேன் நாடிநான்கண்டுகொண்டேன்
நாராணாவென்னும்நாமம். 1

ஆவியே! அமுதே! எனைநினைந்துருகி
அவரவர்பணைமுலை துணையா
பாவியேனுணராது எத்தனைபகலும்
பழுதுபோயொழிந்தன நாள்கள்
தூவிசேரன்னம் துணையொடும்புணரும்
சூழ்புனற்குடந்தையேதொழுது என்
நாவினாலுய்யநான்கண்டுகொண்டேன்
நாராணாவென்னும்நாமம். 2

சேமமேவேண்டித்தீவினைபெருக்கித்
தெரிவைமாமருவமேமருவி
ஊமனார்கண்டகனவிலும் பழுதாய்
ஒழிந்தனகழிந்த அந்நாள்கள்
காமனார்தாகைநம்முடையடிகள்
தம்மடைந்தார்மனத்திருப்பார்
நாமம்நானுய்யநான்கண்டுகொண்டேன்
நாராணாவென்னும்நாமம். 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்றியேவேண்டி வீழ்பொருட்கிரங்கி
வேற்கணார்கலவி யேகருதி
நின்றவாநில்லா நெஞ்சினையுடையோன்
என்செய்கேன்? நெடுவிசும்பணவும்
பன்றியாய்அன்று பாரகங்கீண்ட
பாழியானாழியானருளே
நன்றுநானுய்ய நான்கண்டுகொண்டென்
நாராணாவென்னும்நாமம். 4

கள்வனேனானேன்படிறுசெய்திருப்பேன்
கண்டவாதிரிதந்தேனேலும்
தெள்ளியேனானேன்செல்கதிக்கமைந்ததேன்
சிக்கெனத்திருவருள்பெற்றேன்
உள்ளெலாமுருகிக்குரல்தழுத்தொழிந்தேன்
உடம்பெலாம்கண்ணநீர்வோர
நள்ளிருளளவும்பகலும்நானழைப்பன்
நாராயணாவென்னும்நாமம். 5

எம்பிரான்எந்தை என்னுடைச்சுற்றம்
எனக்கரசுஎன்னுடை வாணாள்
அம்பினால்அரக்கர் வெருக்கொளநெருக்கி
அவருயிர்செகுத்த எம்மண்ணல்
வம்புலாம்சோலைமாமதிள் தஞ்சை
மாமணிக்கோயிலேவணங்கி
நம்பிகாள்!உய்யநான்கண்டுகொண்டேன்
நாராயணாவென்னும்நாமம். 6

இற்பிறப்பறியீர்இவரவரென்னீர்
இன்னதோர் தன்மையென்றுஉணரீர்
கற்பகம்புலவர்களைகணென்றுலகில்
கண்டவாதொண்டரைப்பாடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்பொருளாளீர் சொல்லுகேன்வம்மின்
சூழ்புனறகுடந்தையேதொழுமின்
நற்பொருள்காண்மின்பாடிநீருய்மின்
நாராயணாவென்னும்நாமம். 7

கற்றிலேன்கலைகள்ஐம்புலன்கருதும்
கருத்துளேதிருத்தினேன்மனத்தை
பெற்றிலென்அதனால்பேதையேன்நன்மை
பெருநிலத்தாருயிர்க்கெல்லாம்
செற்றமேவேண்டித்திரிதர்வேன்தவிர்ந்தேன்
செல்கதிக்குஉய்யுமாறெண்ணி
நல்துணையாகப்பற்றினேன்அடியேன்
நாராயணாவென்னும்நாமம். 8

குலம்தரும்செல்வம்தந்திடும்
அடியார்படுதுயராயினவெல்லாம்
நிலந்தரஞ்செய்யும்நீள்விசும்பருளும்
அருளொடுபெருநிலமளிக்கும்
வலந்தரும்மற்றுந்தந்திடும்
பெற்றதாயினும்ஆயினசெய்யம்
நலந்தருஞ்சொல்லைநான்கண்டுகொண்டேன்
நாராயணாவென்னும் நாமம். 9

மஞ்சுலாஞ்சோலைவண்டறைமாநீர்
மங்கையார்வாள்கலிகன்றி
செஞ்சொலாலெடுத்ததெய்வநல்மாலை
இவைகொண்டுசிக்கனத் தொண்டீர்
துஞ்சும்போதுஅழைமின்துயர்வரில்நினைமின்
துயரிலீர்சொல்லிலும்நன்றாம்
நஞ்சுதான்கண்டீர்நம்முடைவினைக்கு
நாராயணாவெனும்நாமம். 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவக்கிரக தோத்திரம்



ஓம் ஆதித்யாதி நவக்ரஹ தேவதாப்யோ நம:

சூரிய பகவான்

**ஓம் அம் ஆதித்யாய நம:**

காசினியிளை நீங்குங் கதிரொளி யாகியெங்கும்
பூசனையுலகோர் போற்றப் புசிப்பொடு சுகத்தைநல்கும்
வாசியேழுடைய தேர்மேல் மகாகிரி வலமாய்வந்த
தேசிகாவெனை ரட்சிப்பாய் செங்கதிரவனே போற்றி 1

சந்திர பகவான்

**ஓம் சம் ஸோமாய நம:**

அலைகட லதனினின்று அன்றுவந் துதித்தபோது
கலைவளர் திங்களாகிக் கடவுளென் றெவருமேத்துஞ்
சிலைநுத லுமையாள்பங்கன் செஞ்சடைப் பிறையாய்மேரு
மலைவல மாகவந்த மதியமே போற்றி போற்றி 2

அங்காரக பகவான்

**ஓம் கும் அங்காரகாய நம:**

வசனநற் தைரியத்தோடு மன்னவர் சபையில் வார்த்தை
புசபல பராக்கிரமங்கள் போர்தனில் வெற்றியாண்மை
நிசமுட னவரவர்க்கு நீணில தனிலளிக்குங்
குசனில மகனாஞ்செவ்வாய் குரைகழல் போற்றி போற்றி 3

புதன் பகவான்

**ஓம் பும் புதாய நம:**

மதனநூல் முதலாநான்கு மறைபுகழ் கல்விஞானம்
விதமுட னவரவர்க்கு விஞ்ஞைகளருள் வோன்திங்கள்
சுதன்பலசு பாபங்கள் சுகம்பல கொடுக்கவல்லான்
புதன்கவிப் புலவன் சீர்மால் பொன்னடி போற்றி போற்றி 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு பகவான்

**ஓம் குங் குருதேவாய நம:**

மறைமிகு கலை நூல்வல்லோன் வானவர்க் கரசன்மந்திரி
நறைசொறி கற்பகப்பொன் னாட்டினுக்கதிபனாகி
நிறைதனஞ் சிவிகைமண்ணி வீடுபோகத்தை நல்கு
இறையவன் குருவியாழன் இருமலர்ப் பாதம் போற்றி 5

சுக்கிர பகவான்

**ஓம் சும் சுக்கிரதேவாய நம:**

மூர்க்கவான் சூரன்வாணன் முதலினோர் குருவாய்வையங்
கார்க்கவான் மழைபெய்விக்குங் கலிமகன் ககனமீய்வோன்
தீர்க்கவான் வானவர்கள் போற்றச் செத்தவர்தமையெழுப்பும்
பார்க்கவான் சுக்ராச்சாரி பாதபங்கயமே போற்றி 6

சனி பகவான்

**ஓம் சங் சனிதேவாய நம:**

முனிவர்க டேவரேழு மூர்த்திகண் முதலினோர்கள்
மனிதர்கள் சகலவாழ்வுன் மகிமையதல்லா துண்டோ
கனிவுளதெய்வம் நீயே கதிர்சேயே காகமேறுஞ்
சனிபகவானே யுனைத்துதிப்பேன் தமியனேற் கருள்செய்வாயே 7

இராகு பகவான்

**ஓம் ரம் இராகுதேவாய நம:**

வாகுசேர் நெடுமான் முன்னம் வானவர்க் கமுதமீயப்
போகுமக்காலை யுன்றன் புணர்ப்பினாற் சிரமேயற்றுப்
பாகுசேர் மொழியாள்பங்கன் பரன்கையில் மீண்டும் பெற்ற
ராகுவேயுனைத்து திப்பேன் ரட்சிப்பாய் ரட்சிப்பாயே 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேது பகவான்

**ஓம் உம் கேது தேவாய நம:**

மாதுசேர்நெடுமால் முன்னால் மாகிரி வலமேபோந்து
நீதிநெறி நடுவகுத்து நிறைதனந்தந் தையம்தீர்க்கும்
மாதுசேய் கதிர்விழுங்கும் சிவன்கையில் சிறமேபெற்ற
கேதுவே யுனைதுதிப்பேன் கீர்த்தியாய் ரட்சிப்பாயே 9

## ஜெய ஹனுமான் பாடல்கள்



ஜெய ஹனுமான் ஜெய ஹனுமான்
மாருதி ராயா ஜெய ஹனுமான்
ஜெய ஹனுமான் ஜெய ஹனுமான்
வாயு குமாரா ஜெய ஹனுமான்
ஜெய ஹனுமான் ஜெய ஹனுமான்
அஞ்சலி புத்ரா ஜெய ஹனுமான்
ஜெய ஹனுமான் ஜெய ஹனுமான்
ஸ்ரீராம தூதா ஜெய ஹனுமான்
ஜெய ஹனுமான் ஜெய ஹனுமான்
மஹானுபாவா ஜெய ஹனுமான்
அஞ்சலி மைந்தா ஆஞ்சநேயா
அருளது தருவாய் ஆஞ்சநேயா
ஆபத்பாந்தவா ஆஞ்சநேயா
ஆதரித்தருள்வாய் ஆஞ்சநேயா
இலங்கையை எரித்தவா ஆஞ்சநேயா
இகபர சுகமருள் ஆஞ்சநேயா
ஈடில்லா பலவானே ஆஞ்சநேயா
ஈகை மிகுந்தவா ஆஞ்சநேயா
உலகம் வியக்கும் ஆஞ்சநேயா
உன்பக்தன் நானய்யா ஆஞ்சநேயா
ஊக்கம் தருவாய் ஆஞ்சநேயா
ஊழ்வினை தீர்ப்பாய் ஆஞ்சநேயா
எங்கள் நாயகா ஆஞ்சநேயா
எங்களைக் காப்பாய் ஆஞ்சநேயா
ஸ்ரீ ராமபக்தா ஆஞ்சநேயா
சிறப்பாக வந்தெனை ஆளுமையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடமைப்பற்றாளனின் மண்ணுலக கடமை முடிந்ததோ!

பெரியபளையைச் சேர்ந்த அமரர் தர்மகுலசிங்கம் அவர்கள் பளை வைத்தியசாலை மருந்துக் கலவையாளர். தாமோதரம்பிள்ளை அவர்களின் 3வது புதல்வராக அவனியில் வந்துதித்தவர், MO எனும் செல்லப் பெயரில் யாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலையில் பல பதவிகளைப் பெற்று பவனி வந்து வைத்திய தேவைக்கு வருகை தந்தவர். தந்தையாரின் வழிகாட்டலில் தமது பரம்பரை குலதெய்வமான மல்வில் மாயவனை தரிசிக்க ஞாயிறுதோறும் தவறமாட்டார்.

தந்தையார் தாமோதம்பிள்ளை அவர்களுக்கு புத்திர பாக்கியம் இல்லாதபோது சோதிட வழிகாட்டலுக்கேற்ப மாயவனின் திருவருளை வேண்டி தவமிருந்தார். அதற்கு ஈடாக மாயவனின் தாமரைத் தடாகத்திற்கருகாமையில் அடியவர்களின் நீராகார வசதிக்காக ஆலய சூழலில் முதல்முறையாக கிணறு ஒன்றினை 1948-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இருபத்தாறாம் திகதி கட்டி முடித்திருந்தார். அக்கிணற்றில் நீர்வளம் பெருக பெருக பயன்பாடும் அதிகரித்திருந்தது. அத்தவப்பயனாக 8 மக்கட் செல்வங்களைப் பெற்று மாயவனின் திருவருளை உலகறியச் செய்து பயனடைந்திருந்தார். மக்கட் செல்வங் களையும் பெற்ற மகிழ்வினில் மாசிமாத பீம ஏகாதசி உற்சவத்தினை தாமோதரம்பிள்ளை அவர்கள் தனதாக்கிக் கொண்டார். அப்பணி இன்றுவரை தொடர்கின்றமை குறிப்பிடத் தக்கது.

அமரர் தர்மகுலசிங்கம் அவர்கள் மாயவன்மீது கொண்டபற்று காரணமாக தனது வாழ்க்கைத் துணையாக மல்வில் மீதுபற்றுக் கொண்ட அன்னமுத்து அவர்களை மாயவன் சன்னிதானத்தில் கரம் பிடித்தார். மாயவன் தலத்தினையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளும் பொழுதும் சிந்தனையால் துதிக்கும் அன்பர் அவர்கள் தனது குடும்பத்தில் ஏற்பட்ட துயர் காரணமாக நேரடியாக தரிசிக்காமல் இல்லத்திலிருந்தே வழிபாட்டார். எனினும் ஆலயத்தின் செயற்பாடுகள் நிகழ்வுகள் தொடர்பாக அவதானித்து வந்தார். ஞாயிறும் தோறும் நடைபெற்ற அன்னப்பணி தடங்கலின்றி நடைபெறவேண்டுமென்ற நல் நோக்கில் ஒவ்வொருமாதமும் ஒரு தொகுதி அரிசியினை வழங்கி வந்தார். வடபகுதிக்கென விஷேடமாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காலத்தில் தினமும் 50கிலோ மீற்றர் துவிச்சக்கர வண்டியில் பயணித்து தனது அரச கடமையினை நிறைவேற்றிய பெருமைக்குரியவர். தானுண்டு தன்கடமை, குடும்பம் வணக்கஸ்தலம், தன்முயற்சியென கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் வாழ்ந்து காட்டிய பெருமைக்குரிய தர்மகுலத்தின் சிங்கமாக விளங்கிய அமரர் அவர்கள் தன் பிறந்தநாளிலேயே மாயவன் திருவடிகளை சரணடைவாரென யாரும் எதிர்பார்க்கவில்லை, அச்செய்தி எமக்கு எட்டியது, துயரச் செய்தி அறிந்து கலங்கினோம். மலர்வும் உதிர்வும் இயற்கையின் சுழற்சி என ஆறுதலடைந்தோம் அன்னாரின் இழப்பின் துயரில் துவண்டுள்ள அன்பின் துணைவியார் பாசமிகு பிள்ளைகள் மருமக்கள் சகோதரர்களுக்கு எமது அனுதாபங் களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் விண்ணுலகப் பயணம் நற்பேறடைவதற்கு அன்னாரின் குல தெய்வமான மல்வில் மாயவன் திருவடிகளைப் பணிகின்றோம்.

தலைவர்,

**தர்மகர்த்தசபை,**

**மல்வில் கிருஷ்ணன் கோயில்,**

**இயக்கச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு

1949

01

28

உதிர்வு

2023

01

28

எமது பாடசாலையின் பௌதிகவள அபிவிருத்திக்கும், மாணவர்களின் கற்றலுக்கு ஊக்குவிப்பு உதவிகளையும் வழங்கிவரும் திருமதி.அன்னமுத்து தர்மகுலசிங்கம் அவர்களின் அன்புக்கணவர்...

## அமரர்.திரு.தாமோதரம்பிள்ளை தர்மகுலசிங்கம்

அவனிதன்னில் அவதரித்து நேற்று வரை
வாழ்வாங்கு வாழ்ந்தீர்களே
இன்று இறைவனிடத்து சரணடைய
காலமும் தான் கனிந்ததுவோ
பேச நாவெழாமல் தவித்து நிற்கின்றோம்
எமது கண்ணீரை காணிக்கையாக்குகிறோம்
இறைவன் சந்நிதியில் உமக்கு
நிரந்தர இடம் கிடைக்க வேண்டுகின்றோம்.

அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தவர்களுக்கும், அவரின் அன்பானவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**துயரில் கலந்து கொள்ளும் : பாடசாலைச் சமூகம்**

**கிளி/ பேராலை சி.சி.த.க பாடசாலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்.

பிறப்பொன்று இருப்பின் அன்றே இறப்பும் நியதியே என்ற வகையில் எங்கள் குடும்பத்தின் தலைமகன் வழிகாட்டி அமரர் **தாமோதரம்பிள்ளை தர்மகுலசிங்கம்** அவர்கள் சிவபதம் அடைந்த செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசியிலும் ஆறுதல் தெரிவித்தவர்கள் அன்னாரின் இறுதி கிரிகைகளிலும் இறுதி யாத்திரையிலும் கலந்து கொண்டவர்கள், 31 நாட்களில் உணவளித்து உற்சாகம் தந்தோர் அந்தியேட்டி மற்றும் வீட்டு கிருத்தியங்களில் உதவியவர்கள் இம்மலரை வடிவமைக்க உதவிய பிரதி திட்டமிடல் பணிப்பாளர்ர் திரு. அ. கேதீஸ்வரன் அவர்களுக்கும் எம் இதய பூர்வமான நன்றிகளை தெரிவிப்பதுடன் அவர் நோயுற்ற வேளையில் வைத்தியசாலையிலும் வீட்டிலும் உதவிய அனைவருக்கும் எம் இதயபூர்வமான நன்றிகள் உரித்தாகட்டும்.

காலத்தால் செய்த நன்றி சிறிது எனினும்
ஞானத்தின் மானப்பெரிது.



பெரியபளை,
பளை.

இங்ஙனம்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

★ தமோதரம்பிள்ளை + ★ செல்லம்மா

★ சுவாமிநாதன்
★ நாகரட்னம்
★ தர்மகுலசிங்கம்
தனபாலசிங்கம்
தர்மராஜசிங்கம்
அருமைநாதன்
அரியமலர்
சிவநாதன்

★ சின்னையா + ★ பொன்னு

★ பொன்னையா
★ வல்லிபுரம்
★ கந்தையா
சின்னம்மா
★ இராசம்மா
தெய்வானை
அன்னலட்சுமி
செல்லம்மா
அன்னமுத்து
பரமேஸ்வரி
★ செல்வமணி

**தர்மகுலசிங்கம் + அன்னமுத்து**

தர்மராஜினி + திருமாறன்
ஆருசா

தர்மராஜ் + கௌஸ்திகா

தர்மரஜீவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடைய எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு
எதை நீ படைத்திருக்கிறாய்
அது வீணாகுவதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது
எதைக் கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது
எது இன்று உன்னுடையதோ
அது நாளை
மற்றொருவருடையதாகிறது
மற்றொருநாள்
வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின்
சாராம்சமுமாகும்.







-ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா-

SriRaam Graphic & Printers Puttur Junction Meesalai.-0773707831

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org